



விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி முன்னிலையில். விக்கிரவாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார். அமைச்சர்கள் சி.வெ.கணேசன், செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கம்யூனிஸ்ட் கட்சி ஏ.வி.சரவணன், வழக்கறிஞர் ராமமூர்த்தி, காங்கிரஸ் ஆர்.பி.ரமேஷ், விசிக தேர்தல் மேலிடப் பொறுப்பாளர் குணவழகன் மாவட்டச் செயலாளர்கள் திலிபன், பெரியார், முஸ்லிம் லீக் அமீர் அப்பாஸ், மனித நேய மக்கள் கட்சி முஸ்தாக்தீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்

# கழக வேட்பாளர் அன்னியூர் சிவா வேட்பு மனுத் தாக்கல்!

## அமைச்சர் க.பொன்முடி – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.– பொன்.கௌதமசிகாமணி – அமைச்சர்கள் – ‘இந்தியா’ கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்பு!

விக்கிரவாண்டி, ஜீன் 20 -

விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி முன்னிலையில். விக்கிர வாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி, கடந்த ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி திடீர் உடல்நலக் குறைவால் காலமானார். இதனால் விக்கிரவாண்டி சட்டசபை தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிப்பு ஜீன் 10 ஆம் தேதி இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

விக்கிரவாண்டி சட்டசபை தொகுதியில் ஜீலை 10 ஆம் தேதி இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. விக்கிரவாண்டி தொகுதி சட்டசபை தேர்தல் ஜீலை 10ல் நடைபெறும் நிலையில் கடந்த ஜீன் 14 முதல் வேட்பு மனுத் தாக்கல் தொடங்கியது. விக்கிர வாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனுக்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்து வருகின்றனர்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளராக கழக விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா போட்டியிடுவார் என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இந்நிலையில் விக்கிர வாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில். விக்கிர வாண்டி தேர்தல் பணிமனையிலிருந்து இந்தியா கூட்டணி தோழர்களுடன் ஊர்வலமாகச் சென்று விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

இதில் அமைச்சர்கள் சி.வெ.கணேசன், செஞ்சி கே.எஸ்.மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கம்யூனிஸ்ட் கட்சி ஏ.வி.சரவணன், வழக்கறிஞர் ராமமூர்த்தி, காங்கிரஸ் ஆர்.பி.ரமேஷ், விசிக தேர்தல் மேலிடப் பொறுப்பாளர் குணவழகன் மாவட்டச் செயலாளர்கள் திலிபன், பெரியார், முஸ்லிம் லீக் அமீர் அப்பாஸ், மனித நேய மக்கள் கட்சி முஸ்தாக்தீன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### தொழிற்சாலைகள் நகரமயமாதல் –

# சமூக வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

## இந்திய மேலாண்மை கழக ஆய்வில் தகவல்!

*புதுடெல்லி, ஜூன் 20 -*

*தொழிற்சாலைகள், நகர மயமாதல் மற்றும் சமூக வளர்ச்சி குறியீடு ஆகியவற்றில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழ்நாடு முன்னணியில் உள்ளது இந்திய மேலாண்மை கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.*

*தொழிற்சாலைகள், நகர மயமாதல் மற்றும் சமூக வளர்ச்சி குறித்து, ஐஐஎம் எனப்படும் இந்திய மேலாண்மை கழகத்தின் சார்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் இந்தியாவில் உள்ள மற்ற சில மாநிலங்களோடு ஒப்பிடும்போது பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் இருப்பது தெரியவந்துள்ளது. ஒன்றிய அரசுக்கு அதிக வரி வருவாய் வழங்கும் மாநிலங்களில், தமிழ்நாடு முன்னிலையில் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளைப் பொருத்தவரையில் மகாராஷ்டிராவில் 28 ஆயிரம் தொழிற்சாலைகளும், குஜராத்தில் 22 ஆயிரம் தொழிற்சாலைகளும் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. அதே போல தமிழ்நாட்டின் சமூக வளர்ச்சி குறியீடு மற்ற மாநிலங்களை விட 10 விழுக்காடு கூடுதலாக இருப்பதும் இந்திய மேலாண்மை கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.*

# இயல்புக்கு குறைவான மழைப்பொழிவு- வானிலை ஆய்வு மையம் தகவல்!

*புதுடெல்லி, ஜூன் 20 -*

*டெல்லி, ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட வடமாநிலங்களில் வெப்ப அலை வீசி வருகிறது. இதனால், தண்ணீர் பற்றாக்குறை, வெப்ப கால நோய்கள் என மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்டு உள்ள செய்தியில், நடப்பு மாதத்தில் இந்தியாவில் சராசரி மழைப்பொழிவானது, இயல்புக்கும் குறைவாக இருக்கக் கூடும் என தெரிவித்து உள்ளது.*

*இவற்றில், தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இயல்பில் இருந்து இயல்புக்கும் கூடுதலான மழைப் பொழிவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், வடக்கு மற்றும் மத்திய மாநிலங்களில் இயல்புக்கும் குறைவாக மழைப்பொழிவு இருக்க கூடும் என கூறப்படுகிறது. ஏற்கனவே இந்த பகுதிகளில் வெப்ப அலை வீசி வரும் சூழலில், இந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.*

*நடப்பு ஜூனில் (ஜூன் 18 வரை) நாடு முழுவதும் ஒட்டுமொத்த அளவில் 64.5 மி.மீ. அளவுக்கு மழை பொழிந்துள்ளது. நீண்ட கால சராசரியான 80.6 மி.மீ. என்ற அளவை காட்டிலும் இது 20 சதவீதம் குறைவாகும் என்றும் தெரிவித்து உள்ளது.*



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா நகராட்சியில் ரூ.2.98கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் புதியபேருந்து நிலையத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் வாலாஜா நகர செயலாளர் து.தில்லை, சசிகுணாஉமர், ஒப்பந்ததாரர் புருஷோத்தமன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர்

# ராகுல் காந்தி பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜீன் 20-

காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தி எம்.பி. பிறந்த நாளையொட்டி தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி அவர்கள் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**அன்புச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**நம் நாட்டு மக்களின் மீதான தங்களின் ஈடுபாடு உங்களை மிகப் பெரும் உயரங்களுக்கு இட்டுச் செல்லும். வரும் ஆண்டு தங்களுக்குத் தொடர்ந்து முன்னேற்றத்தோடும் வெற்றியோடும் திகழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மே, ஜூன் மாதங்களுக்கான

# துவரம் பருப்பு - பாமாயில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் தடையின்றி கிடைக்கும்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

**சென்னை, ஜீன் 20-**

**தமிழ்நாடு அரசால் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் ரூ. 14,697 கோடி மதிப்பிலான 7 இலட்சம் மெ.டன் துவரம் பருப்பு மற்றும் 64.62 கோடி பாமாயில் பாக்கெட்டுகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 2.23 கோடி குடும்ப அட்டை தாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு ள்ளது. மே மற்றும் ஜீன் 2024 மாதங்களுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அமைச்சர் அர.சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் விலைவாசியினைக் கட்டுப்படுத்தி, ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தினைப் பாதுகாக்கவும், ஊட்டச்சத்துடன் கூடிய உணவினை உறுதிப்படுத்திடும் நோக்கிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007-ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் வழங்கும் திட்டம் நாட்டிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சிறப்புப் பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் கடந்த 14.04.2007 முதல் ஒவ்வொரு மாதமும் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்யப்பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் இந்நாள் வரை ரூ.7381.91 கோடி மதிப்பிலான 7,00,396 மெ.டன் பருப்பு மற்றும் ரூ.7315.96 கோடி மதிப்பிலான 64,62,50,000 பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்யப்பட்டு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்குத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.



நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நடைமுறையின் காரணமாக மே 2024 ஆம் மாதத்திற்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்வதற்காக 05.04.2024 அன்று இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கோரியதில், 17.04.2024 அன்று அனுமதி பெறப்பட்டு அன்றைய தினமே மே 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நாளிதழ்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

மே 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு 12.05.2024 அன்று பாமாயில் எண்ணெய் மற்றும் 13.05.2024 அன்று துவரம் பருப்பு அதாவது ஆணையத்தின் அனுமதி பெறப்பட்டபின் 24 நாட்களிலேயே கொள்முதல் இறுதி செய்யப்பட்டது.

அதன்படி மே 2024ஆம் மாதத்திற்கான பாமாயில் எண்ணெய் பாக்கெட்டுகள் 100 விழுக்காடு அனைத்து கிடங்குகளுக்கும் அனுப்பி அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

ஜூன் மாதத் தேவையில் 78,44,160 பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பாக்கெட்டுகள் வழங்கும் பணி விரைவுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பினைப் பொறுத்தவரையில் மே 2024 ஆம் மாத ஒதுக்கீடான 1,89,89,000 கிலோவில் இன்றுவரை1,37,79,000கிலோ வழங்கப்பட்டு மீதமும் விரைவாக வழங்கப்பட்டு வருகின்றன. ஜூன் மாதத் தேவையில் 40,16,000 கிலோ இதுவரை வழங்கப்பட்டு மீதியை வழங்கும் பணி விரைவு படுத்தப்பட்டு வருகிறது. ஜூன் 2024 ஆம் மாதத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்காக தேர்தல் ஆணையத்திடம் அனுமதி வேண்டி 07.05.2024 அன்று அனுப்பப்பட்டு 27.05.2024 அன்று அனுமதி பெறப்பட்டு 28.05.2024 அன்றைய நாளிதழ்களில் அறிவிக்கை செய்யப்பட்டு 08.06.2024 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டன.

அதன்பின் 11.06.2024 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் நேரடி பேச்சு வார்த்தை நடத்தி 13.06.2024 அன்று 13,000 மெ.டன் பருப்பு மற்றும் 1,10,00,000 பாமாயில் பாக்கெட்டுகள் கொள்முதல் செய்ய ஆணைகள் வழங்கப்பட்டு கிடங்குகளுக்கு அனுப்பி அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஆதலால் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் எண்ணெய் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மே 2024 ஆம் மாதத்திற்குரிய பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ளாத குடும்ப அட்டைதாரர்கள் ஜுன் மாத முதல் வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவித்திருந்தாலும், ஜுன் மாதம் முழுவதும் பெற்றுக் கொள்ள உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து பொது விநியோகம் மற்றும் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்திற்கு உறுதுணையாக விவசாயிகளின் நலன் காக்க நெல்லுக்கான ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கியது, நெல் மணிகளை வீணாக்காமல் சேமிக்க மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் அமைத்தது, தரமான அரிசியினைத் தொடர்ந்து விநியோகித்திட அரவை ஆலைகளில் கலர் சார்ட்டர் பொருத்தியது, வட்ட அளவில் அதிக எண்ணிக்கையில் செயல்முறைக் கிடங்குகள் கட்டிட நடவடிக்கை எடுத்தது போன்ற செயல்களால் அனைவரது பாராட்டையும் பெற்று பொது விநியோகத் திட்டம் இந்திய அளவில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டு முன்னணி வகிக்கிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் ரூ.10,500 கோடி நிதியை மானியமாக வழங்கி, இத்திட்டத்தினை மேலும் முனைப்புடன் செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலும் 2017-ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பருப்பு மற்றும் பாமாயில் முற்றிலுமாக விநியோகிக்கப்படாமலிருந்த நிலை இருந்துள்ளது. தேர்தல் நன்னடத்தை விதிகளினால் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களைத் திரித்து எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிலர் தெரிவித்த குற்றச்சாட்டுகள் முறையானதல்ல என்பதோடு மே மற்றும் ஜுன் 2024 மாதங்களின் பருப்பு மற்றும் பாமாயில் ஒதுக்கீடு முழுமையாக நகர்வு செய்யப்பட்டு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

# தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம்!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

*தருமபுரி, ஜூன் 20 -*

*இதுகுறித்து தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி, தெரிவித்துள்ளதாவது:*

*தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், தனியார் துறை நிறுவனங்களும் - தனியார்துறையில் பணிபுரிய விருப்பம் உள்ள மனுதாரர்களும் கலந்துகொள்ளும் “தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்” ஒவ்வொரு மாதத்தின் மூன்றாம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. எனவே, தனியார்துறை நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான நபர்களை நேரடியாக தேர்வு செய்து கொள்ளலாம்.*

*இது ஒரு இலவச பணியே ஆகும். இதன் மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெறுபவர்களுக்கு, அவர்களது வேலைவாய்ப்பு பதிவு ரத்து செய்யப்படமாட்டாது.*

*இம்முகாமில், பல்வேறு தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டு, விற்பனையாளர், மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ், சூப்பர்வைசர், மேலாளர், கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர், அக்கவுண்டன்ட், மெக்கானிக் போன்ற பணிகளுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்ய உள்ளனர்.*

*பள்ளிப்படிப்பு, டிப்ளமோ, பட்டப்படிப்பு என பல்வேறு கல்வித்தகுதிக்கும் ஆட்கள் தேவை என தனியார்துறை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.*

*ஆகவே, மேற்படி பணிகளுக்கு, தகுதியும் விருப்பமும் உள்ள அனைவரும், வருகின்ற 21.06.2024 வெள்ளிக்கிழமை காலை 10:00 மணிக்கு, தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறவுள்ள, தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி தெரிவித்துள்ளார்.*




வேலூர் மாநகர தி.மு.க அலுவலகத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நகராட்சி தலைவருமான மா.பா.சாரதி அவர்களின் 48வது நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர திமுக செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மற்றும் மாநகர பொருளாளர் நா.அசோகன் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக, அணிகளின்நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.